## سُوْرَةُ الْمُدَّثِّرِ مَكِّيَّةٌ وَّهِيَ سِتٌّ وَّخَمْسُوْنَ اٰيَةً وَّفِيْهَا رُكُوْعَانِ

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ○

يٰۤاَيُّهَا الْمُدَّثِّرُ ۙ﴿۱﴾ قُمْ فَاَنْذِرْ ۙ﴿۲﴾ وَرَبَّكَ فَكَبِّرْ ۙ﴿۳﴾ وَثِيَابَكَ
فَطَهِّرْ ۙ﴿۴﴾ وَالرُّجْزَ فَاهْجُرْ ۙ﴿۵﴾ وَلَا تَمْنُنْ تَسْتَكْثِرُ ۙ﴿۶﴾ وَ
لِرَبِّكَ فَاصْبِرْ ؕ﴿۷﴾ فَاِذَا نُقِرَ فِي النَّاقُوْرِ ۙ﴿۸﴾ فَذٰلِكَ يَوْمَئِذٍ
يَّوْمٌ عَسِيْرٌ ۙ﴿۹﴾ عَلَى الْكٰفِرِيْنَ غَيْرُ يَسِيْرٍ ﴿۱۰﴾ ذَرْنِيْ وَمَنْ
خَلَقْتُ وَحِيْدًا ۙ﴿۱۱﴾ وَّجَعَلْتُ لَهٗ مَالًا مَّمْدُوْدًا ۙ﴿۱۲﴾ وَّبَنِيْنَ
شُهُوْدًا ۙ﴿۱۳﴾ وَّمَهَّدْتُّ لَهٗ تَمْهِيْدًا ۙ﴿۱۴﴾ ثُمَّ يَطْمَعُ اَنْ
اَزِيْدَ ۙ﴿۱۵﴾ كَلَّا ؕ اِنَّهٗ كَانَ لِاٰيٰتِنَا عَنِيْدًا ؕ﴿۱۶﴾ سَاُرْهِقُهٗ
صَعُوْدًا ؕ﴿۱۷﴾ اِنَّهٗ فَكَّرَ وَقَدَّرَ ۙ﴿۱۸﴾ فَقُتِلَ كَيْفَ قَدَّرَ ۙ﴿۱۹﴾ ثُمَّ
قُتِلَ كَيْفَ قَدَّرَ ۙ﴿۲۰﴾ ثُمَّ نَظَرَ ۙ﴿۲۱﴾ ثُمَّ عَبَسَ وَبَسَرَ ۙ﴿۲۲﴾
ثُمَّ اَدْبَرَ وَاسْتَكْبَرَ ۙ﴿۲۳﴾ فَقَالَ اِنْ هٰذَاۤ اِلَّا سِحْرٌ
يُّؤْثَرُ ۙ﴿۲۴﴾ اِنْ هٰذَاۤ اِلَّا قَوْلُ الْبَشَرِ ؕ﴿۲۵﴾ سَاُصْلِيْهِ
سَقَرَ ﴿۲۶﴾ وَمَاۤ اَدْرٰىكَ مَا سَقَرُ ؕ﴿۲۷﴾ لَا تُبْقِيْ وَ
لَا تَذَرُ ۚ﴿۲۸﴾ لَوَّاحَةٌ لِّلْبَشَرِ ۚ﴿۲۹﴾ عَلَيْهَا تِسْعَةَ عَشَرَ ؕ﴿۳۰﴾

அத்தியாயம் : 74

## அல் முத்தஸ்ஸிர் _ போர்த்திக் கொண்டிருப்பவர்

வசனங்கள் : 56 மக்கீ ருகூஃகள் : 2

### அளவற்ற அருளாளன், நிகரற்ற அன்புடையோன் அல்லாஹ்வின் பெயரால் ( ஓதுகிறேன்).

1. (போர்வை) போர்த்திக்கொண்டிருப்பவரே!

2. நீர் எழுந்திருப்பீராக! பிறகு ( அல்லாஹ்வின் தண்டனையிலிருந்து) அச்சமூட்டி எச்சரிக்கை செய்வீராக!

3. மேலும், உமதிரட்சகனைப் பெருமைப்படுத்துவீராக.

4. மேலும், உமது ஆடைகளைத் தூய்மையாக வைத்துக்கொள்வீராக.

5. இன்னும், அசுத்தத்தை வெறுத்து விடுவீராக.

6. (நீர் கொடுத்ததைவிட) அதிகமானதைப் பெறக்கருதி (மற்றவருக்கு) உபகாரம் செய்யாதீர்.

7. இன்னும், உமதிரட்சகனுக்காக (க் கஷ்டங்களைச் சகித்துக்கொண்டு) நீர் பொறுமையுடன் இருப்பீராக.

8. குழல் (ஸூர்) ஊதப்பட்டுவிட்டால்_

9. அந்நாளில் அ(வ்வாறு ஊதப்படுவதான)து_ கடினமான நாளாகஇருக்கும்.

10. (அந்நாள்) நிராகரிப்போருக்கு எளிதானதன்று.

11. என்னையும், தனித்த நிலையில் நான் படைத்தவனையும் விட்டுவிடுவீராக.

12. நான் அவனுக்கு ஏராளமான செல்வத்தையும் ஆக்கியிருந்தேன்.

13. அவனுடன் இருக்கக்கூடிய ஆண்மக்களையும் (நான் அவனுக்குக் கொடுத்தேன்).

14. அவனுக்கு (வாழ்வதற்கு வேண்டிய) தயாரிப்புகளை (ஏற்கனவே) அவனுக்காக நான் தயார்செய்து வைத்தேன்.

15. பின்னும், நான் (அவனுக்கு) அதிகமாக்கவேண்டுமென்று அவன் ஆசைப்படுகின்றான்.

16. (ஒருபோதும் அது நடந்தேறக்கூடியது) அல்ல! நிச்சயமாக அவன் நம்முடைய வசனங்களுக்கு முரண்பட்டவனாக இருக்கின்றான்.

17. (அதி சீக்கிரத்தில்) அவனை (வேதனையின்) ஒருகடினமான சிகரத்தில் நான் ஏற்றிவிடுவேன்.

18. நிச்சயமாக அவன் (இந்தக் குர்ஆனுக்கு எதிராக) சிந்தித்தான்; இன்னும், (குர்ஆனைப்பற்றித் தன் மனதில் கற்பனையாக ஒரு கூற்றை) ஏற்படுத்திக் கொண்டான்.

19. ஆகவே, அவன் சபிக்கப்பட்டான்; எவ்வாறு அவன் (ஒரு கூற்றைத்தன் மனதில்) ஏற்படுத்திக்கொண்டான்?

20. பின்னரும் அவன் சபிக்கப்பட்டான்! எவ்வாறு அவன் (ஒரு கூற்றைத் தன் மனதில்) ஏற்படுத்திக்கொண்டான்?

21. பின்னர் அவன் ( நம் வசனங்களை சிந்தித்து) நோக்கினான்.

22. பின்னர் கடு கடுத்தான்; முகமும் சுளித்தான்.

23. பின்னர் திரும்பிச்சென்றான்; இன்னும், அகந்தை கொண்டான்.

24. அப்பால் (முன்னுள்ளோரிடமிருந்து கற்பிக்கப்பட்டு) "வழிவழியாக வந்த சூனியமேயன்றி இது (வேறு) இல்லை" எனக் கூறினான்.

25. "இது மனிதரின் கூற்றே தவிர வேறில்லை" (என்றும் கூறினான்).

26. நான் அவனை "ஸகர்" எனும் நரகத்தில் புகச்செய்வேன்.

27. இன்னும் "ஸகர்" என்னவென்று உமக்கு அறிவித்தது எது?

28. அது (நரகவாசிகளில்எவரையும்) மிச்சம் வைக்காது; (எவரையும்) விட்டும் விடாது.

29. மனிதர்களை (சுட்டுக் கரித்து அவர்களின் மேனியை) மாற்றிவிடக்கூடியது.

30. (காவலர்களாக மலக்குகளில்) அதன்மீது பத்தொன்பது பேர்கள் இருக்கின்றனர்.

وَمَا جَعَلْنَآ اَصْحٰبَ النَّارِ اِلَّا مَلٰٓئِكَةً ۙ وَّمَا جَعَلْنَا عِدَّتَهُمْ
اِلَّا فِتْنَةً لِّلَّذِيْنَ كَفَرُوْا ۙ لِيَسْتَيْقِنَ الَّذِيْنَ اُوْتُوا الْكِتٰبَ
وَيَزْدَادَ الَّذِيْنَ اٰمَنُوْٓا اِيْمَانًا وَّلَا يَرْتَابَ الَّذِيْنَ اُوْتُوا
الْكِتٰبَ وَالْمُؤْمِنُوْنَ ۙ وَلِيَقُوْلَ الَّذِيْنَ فِيْ قُلُوْبِهِمْ مَّرَضٌ
وَّالْكٰفِرُوْنَ مَاذَآ اَرَادَ اللّٰهُ بِهٰذَا مَثَلًا ؕ كَذٰلِكَ يُضِلُّ
اللّٰهُ مَنْ يَّشَآءُ وَيَهْدِيْ مَنْ يَّشَآءُ ؕ وَمَا يَعْلَمُ جُنُوْدَ
رَبِّكَ اِلَّا هُوَ ؕ وَمَا هِيَ اِلَّا ذِكْرٰى لِلْبَشَرِ ﴿٣١﴾ كَلَّا وَالْقَمَرِ ۙ ﴿٣٢﴾ ع ١ ١٥
وَالَّيْلِ اِذْ اَدْبَرَ ۙ ﴿٣٣﴾ وَالصُّبْحِ اِذَآ اَسْفَرَ ۙ ﴿٣٤﴾ اِنَّهَا لَاِحْدَى
الْكُبَرِ ۙ ﴿٣٥﴾ نَذِيْرًا لِّلْبَشَرِ ۙ ﴿٣٦﴾ لِمَنْ شَآءَ مِنْكُمْ اَنْ يَّتَقَدَّمَ
اَوْ يَتَاَخَّرَ ؕ ﴿٣٧﴾ كُلُّ نَفْسٍ بِمَا كَسَبَتْ رَهِيْنَةٌ ۙ ﴿٣٨﴾ اِلَّآ اَصْحٰبَ
الْيَمِيْنِ ؕ ﴿٣٩﴾ فِيْ جَنّٰتٍ ۛ يَتَسَآءَلُوْنَ ۙ ﴿٤٠﴾ عَنِ الْمُجْرِمِيْنَ ۙ ﴿٤١﴾ مَا مع ١٦
سَلَكَكُمْ فِيْ سَقَرَ ﴿٤٢﴾ قَالُوْا لَمْ نَكُ مِنَ الْمُصَلِّيْنَ ۙ ﴿٤٣﴾ وَلَمْ عند المتقدمين ١٢
نَكُ نُطْعِمُ الْمِسْكِيْنَ ۙ ﴿٤٤﴾ وَكُنَّا نَخُوْضُ مَعَ الْخَآئِضِيْنَ ۙ ﴿٤٥﴾ وَ
كُنَّا نُكَذِّبُ بِيَوْمِ الدِّيْنِ ۙ ﴿٤٦﴾ حَتّٰٓى اَتٰىنَا الْيَقِيْنُ ؕ ﴿٤٧﴾ فَمَا تَنْفَعُهُمْ
شَفَاعَةُ الشّٰفِعِيْنَ ؕ ﴿٤٨﴾ فَمَا لَهُمْ عَنِ التَّذْكِرَةِ مُعْرِضِيْنَ ۙ ﴿٤٩﴾

31. மேலும், நரகத்தின் காவலர்களை மலக்குகளாகவேதவிர நாம் ஆக்கவில்லை; இன்னும், அவர்களுடைய எண்ணிக்கையை நிராகரிப்போருக்குச் சோதனை யாகவே தவிர நாம் ஆக்கவில்லை; வேதம் கொடுக்கப்பட்டோர் (இதனை) உறுதி கொள்வதற்காகவும், விசுவாசங்கொண்டோர் (தம்) விசுவாசத்தை அதிகமாக்கிக் கொள்வதற்காகவும், இன்னும், வேதம் கொடுக்கப் பட்டோரும், விசுவாசிகளும் (இதைப்பற்றிச்) சந்தேகிக்காமலிருப்பதற்காகவும், (நாம் அவ்வாறு ஆக்கினோம்.) இன்னும், எவர்களுடைய இதயங்களில் நோய் இருக்கின்றதோ அவர்களும், நிராகரித்துக்கொண்டிருப்போரும் "இதனைக் கொண்டு உதாரணமாக அல்லாஹ் எதை (அறிவிக்க) நாடினான்?" என்று கூறுவதற்காகவும் (இவ்வாறு ஆக்கினோம். நபியே!) இவ்வாறே அல்லாஹ், தான் நாடியவர்களை வழிகெடச்செய்கிறான்; தான் நாடியவர்களை நேர் வழியிலும் செலுத்து கின்றான்; இன்னும், உமதிரட்சகனின் படைகளை அவனைத் தவிர (மற்றெவரும்) அறியமாட்டார்; அது மனிதர்களுக்கு உபதேசமேயன்றி வேறில்லை.

32. (நரகக்காவலர்கள் விஷயமாக நிராகரிப்போர் கூறுவதுபோன்று) அல்ல! சந்திரனின் மீதும் சத்தியமாக!

33. இரவின் மீதும் சத்தியமாக – அது பின் செல்லும்போது!

34. அதிகாலையின் மீதும் சத்தியமாக – அது வெளிச்சமாகும்போது!

35. நிச்சயமாக (நரகமாகிய) அது மிகப்பெரியவற்றுள் ஒன்றாகும்.

36. அது, மனிதர்களுக்கு அச்சமூட்டி எச்சரிக்கை செய்கின்றநிலையில் (மிகப் பெரியதாகும்).

37. உங்களில் எவர் (நன்மைக்காக) முந்திச் செல்வதற்கோ – அல்லது (நன்மையை விட்டும்) பின் தங்கிவிடுவதற்கோ விரும்புகின்றாரோ அவருக்கு (அது அச்சமூட்டி எச்சரிக்கைச் செய்கிறது).

38. ஒவ்வோர் ஆத்மாவும், தான் சம்பாதித்தவற்றுக்குப் பிணையாக்கப் பட்டதாகும்.

39. ஆயினும், (வலக்கையில் பதிவுப்புத்தகம் கொடுக்கப்பட்ட) வலது சாரியினர் தவிர –

40. (அவர்கள்) சுவனங்களில் (இருப்பர்) அப்போது தங்களுக்குள் (விசாரித்துக்) கேட்பார்கள்:

41. குற்றவாளிகளைப்பற்றி –

42. "உங்களை ஸகர் எனும் நரகத்தில் புகுத்தியது எது?"

43. அ(தற்க)வர்கள், "தொழக்கூடியவர்களில் (உள்ளவர்களாக) நாங்கள் இருக்கவில்லை" என்று கூறுவார்கள்.

44. "இன்னும் நாங்கள் ஏழைக்கு உணவளிப்பவர்களாகவும் இருக்கவில்லை."

45. "(வீணானவற்றில்) மூழ்கி இருந்தோருடன் நாங்களும் மூழ்கி இருந்தோம்."

46. மேலும் "கூலி கொடுக்கும் இந்நாளையும் நாங்கள் பொய்யாக்குபவர்களாக இருந்தோம்."

47. "எங்களுக்கு (மரணம் எனும்) உறுதி வரும்வரை (இவ்வாறு இருந்தோம்" என்றும் கூறுவார்கள்).

48. ஆகவே, (அவர்களுக்காகப்) பரிந்துரைசெய்வோரின் பரிந்துரை அவர்களுக்குப் பயனளிக்காது.

49. எனவே, நல்லுபதேசத்தை விட்டும் புறக்கணிக்கக் கூடியவர்களாக இருக்க அவர்களுக்கு என்ன நேர்ந்தது?

كَاَنَّهُمْ حُمُرٌ مُّسْتَنْفِرَةٌ ۙ﴿٥٠﴾ فَرَّتْ مِنْ قَسْوَرَةٍ ؕ﴿٥١﴾ بَلْ يُرِيْدُ
كُلُّ امْرِئٍ مِّنْهُمْ اَنْ يُّؤْتٰى صُحُفًا مُّنَشَّرَةً ۙ﴿٥٢﴾ كَلَّا ؕ بَلْ لَّا
يَخَافُوْنَ الْاٰخِرَةَ ؕ﴿٥٣﴾ كَلَّاۤ اِنَّهٗ تَذْكِرَةٌ ۚ﴿٥٤﴾ فَمَنْ شَآءَ
ذَكَرَهٗ ؕ﴿٥٥﴾ وَمَا يَذْكُرُوْنَ اِلَّاۤ اَنْ يَّشَآءَ اللّٰهُ ؕ هُوَ اَهْلُ
التَّقْوٰى وَاَهْلُ الْمَغْفِرَةِ ﴿٥٦﴾ ع

## سُوْرَةُ الْقِيٰمَةِ مَكِّيَّةٌ وَّهِيَ اَرْبَعُوْنَ اٰيَةً وَّفِيْهَا رُكُوْعَانِ

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ
لَاۤ اُقْسِمُ بِيَوْمِ الْقِيٰمَةِ ۙ﴿١﴾ وَلَاۤ اُقْسِمُ بِالنَّفْسِ اللَّوَّامَةِ ﴿٢﴾
اَيَحْسَبُ الْاِنْسَانُ اَلَّنْ نَّجْمَعَ عِظَامَهٗ ؕ﴿٣﴾ بَلٰى قٰدِرِيْنَ
عَلٰۤى اَنْ نُّسَوِّيَ بَنَانَهٗ ﴿٤﴾ بَلْ يُرِيْدُ الْاِنْسَانُ لِيَفْجُرَ
اَمَامَهٗ ۚ﴿٥﴾ يَسْئَلُ اَيَّانَ يَوْمُ الْقِيٰمَةِ ؕ﴿٦﴾ فَاِذَا بَرِقَ
الْبَصَرُ ۙ﴿٧﴾ وَخَسَفَ الْقَمَرُ ۙ﴿٨﴾ وَجُمِعَ الشَّمْسُ وَالْقَمَرُ ۙ﴿٩﴾
يَقُوْلُ الْاِنْسَانُ يَوْمَئِذٍ اَيْنَ الْمَفَرُّ ۚ﴿١٠﴾ كَلَّا لَا وَزَرَ ؕ﴿١١﴾ اِلٰى
رَبِّكَ يَوْمَئِذِ ۨالْمُسْتَقَرُّ ؕ﴿١٢﴾ يُنَبَّؤُا الْاِنْسَانُ يَوْمَئِذٍۭ
بِمَا قَدَّمَ وَاَخَّرَ ؕ﴿١٣﴾ بَلِ الْاِنْسَانُ عَلٰى نَفْسِهٖ بَصِيْرَةٌ ۙ﴿١٤﴾

50. அவர்கள் வெருண்டோடுகின்ற(காட்டுக்)கழுதைகளைப் போல்(இருக்கின்றனர்!)

51. (காட்டுக்கழுதைகளான) அவை சிங்கத்தை விட்டும் வெருண்டோடின.

52. மாறாக, அவர்களில் ஒவ்வொரு மனிதனும், விரிக்கப்பட்ட ஆகமங்கள் (தனக்கும்) கொடுக்கப்படவேண்டும் என நாடுகிறான்.

53. (அது நடக்கப்போவது) இல்லை! மாறாக, மறுமையைப்பற்றி அவர்கள் பயப்படுவதில்லை.
54. நிச்சயமாக இது நல்லுபதேசமாகும்.

55. (உபதேசம் பெற) யார் நாடுகிறாரோ அவர் இதனை நினைவில் வைத்து(உபதேசம் பெற்று)க் கொள்ளவும்.

56. இன்னும், அல்லாஹ் நாடினாலன்றி அவர்கள் நல்லுபதேசம் பெற மாட்டார்கள்; அவனேபயப்படுவதற்குரியவனும்,(விசுவாசிகளை)மன்னிப்பதற்குரியவனும்ஆவான்.

---

அத்தியாயம் : 75

## அல்கியாமா _ மறுமை நாள்

வசனங்கள் : 40 மக்கீ ருகூஃகள் : 2

---

### அளவற்ற அருளாளன், நிகரற்ற அன்புடையோன் அல்லாஹ்வின் பெயரால் ( ஓதுகிறேன்).

1. மறுமை நாளைக்கொண்டு நான் சத்தியம் செய்கிறேன்.
2. (வழிபாட்டில் மனிதன் குறைவு செய்துவிட்டதைப்பற்றி) மிக நிந்தித்துக் கொண்டிருக்கும் ஆன்மாவைக் கொண்டும் நான் சத்தியம் செய்கிறேன்.
3. மனிதன் (இறப்பெய்தி, மண்ணோடு மண்ணாக மக்கிப்போன பின்னர்) அவனுடைய எலும்புகளை நாம் ஒன்று சேர்க்கவேமாட்டோம் என்று எண்ணுகின்றானா?
4. ஆம்! அவனுடைய விரல்களின் நுனிகளை (_முன்பிருந்தது போல் இணைத்துச் சரிப்படுத்திச் செவ்வையாக்க நாம் ஆற்றலுடையோராக இருக்கிறோம்.
5. மாறாக, மனிதன் தன் எதிர்காலத்திலும் (பாவத்திலிருந்து விலகிவிடாது) பாவம் செய்யவே நாடுகிறான்.
6. "மறுமைநாள் எப்பொழுது(வரும்)?" என (அதிசயமாக) அவன் கேட்கிறான்.
7. (அந்நாளின் அமளிகளைக்கண்டு திடுக்கிட்டு) பார்வை நிலைகுத்திவிட்டால்;
8. சந்திரனும் ஒளி இழந்து(விடுமானால்);
9. சூரியனும், சந்திரனும் ஒன்றாக்கப்பட்டு விடும்(ஆனால்);
10. அந்நாளில் "எங்கு விரண்டோடுவது" என மனிதன் கூறுவான்.
11. இல்லை! தப்ப இடமில்லை.
12. அந்நாளில் (அனைவரின்) தங்குமிடம் உம் இரட்சகனிடத்திலாகும்.
13. மனிதன் _ அவன் முற்படுத்திவைத்ததையும், அவன் பிற்படுத்திவைத்ததையும் (பற்றி ) அந்நாளில் அறிவிக்கப்படுவான்.
14. ஏன், மனிதன் தன் மீது பார்வையுடையவனாக(தன் செயல்களுக்குச் சாட்சியாக) இருப்பான்.